Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER15, 2021

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 15, 2021 | ஒளி: 07 கதிர்: 127 | பக்கம்:08

கொழும்பில் பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் மீட்பு

கொழும்பு பிரிஸ்டல் வீதியிலுள்ள கட்டடமொன்றிலிருந்து பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிரிஸ்டல் வீதியிலுள்ள கட்டடமொன்றின் 5 ஆவது மாடியிலுள்ள மலசல கூடத்தில் இருந்தே இந்ததத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

ரி 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 176 ரவைகளும், 9 மில்லிமீற்றர் துப்பாக்கிக்கு பயன்டுத்தப்படும் 29 ரவைகளும் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பந்தனுக்குப் பின்னர்

கூட்டமைப்புக்கு 'கூட்டு' தலைமை

எஸ்.தொசேரியன் லெம்பேட்

சம்பந்தனின் காலத்துக்குப் பின்னர், கூட்டுத் தலைமையாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்படுமென, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில், நேற்று (14) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையை தான் ஏற்கத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவினர். இதற்குப் பதிலளித்து கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தற்போதைய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்குப் பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை என்பது கூட்டுத்தலைமையாக இருக்கும் என்றார்.

சுமந்திரன், அவரின் தனிப்பட்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். அதை ஏற்பதா, இல்லையா என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பே முடிவெடுக்கும் எனவும்,

தொடர்ச்சி P2

24 இந்திய மீனவர்கள் கைது

வேந்தரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடித்த குற்றச்சாட்டில், இந்தியா, தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என, கடற்றொழில் நீரியல்வளத்துறை உதவிப்பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

5 நாள்களுக்குள் தீர்வு வேண்டும்

அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வலியுறுத்து

சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தெளிவான தீர்மானமொன்றை அரசாங்கம், எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

"அவ்வாறு தீர்வு வழங்காவிடின் தங்களின் தொழிற்சங்க போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்" என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை

50 சதவீதத்தால் வீழ்ச்சி; இன்று முக்கிய அறிவிப்பு

அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

மீண்டும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்காது, கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

பதுளையில் 10 கொரோனா

பாலித ஆரியலங்க

பதுளை தாதியர் வித்தியாலத்தின் மாணவர்கள் பத்துப் பேருக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பதுளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அறிவித்துள்ளது.

அந்த மாணவர்களில் பத்துப் பேருக்கும் நேற்று (14) முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றாளர்கள் 680 பேர் அடையாளம் காணப்பட்டனர். நாட்டில் இதுவரை 5 இலட்சத்து 28 ஆயிரத்து 415 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 4 இலட்சத்து 91 ஆயிரத்து 238 பேர் குணமடைந்துள்ளனர். இதேவேளை, மேலும் 31 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

இன்னும் சில தளர்வுகள் இன்று முதல் அமலாகும்

மண்டபங்களில் மதுபான பாவனைக்குத் தடை

திருமணங்கள், இறுதி சடங்குகள், உணவகங்கள், கூட்டங்கள், பாசறைகள், கருத்தரங்குகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் மேலும் தளர்த்தப்படவுள்ளன.

தளர்வுகளை மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டல்களை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், நேற்று (14) வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, திருமண மண்டபத்தில் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை 25 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை 50ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமண மண்டபத்தில்,

தொடர்ச்சி P2

சலூன்களில் விலை கூடியது

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனை தாங்கிக்கொள்வதற்காக, சலூன்களில் முடிவெட்டுதல், முகச்சவரம் செய்தல் ஆகியவற்றுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. கொழும்பு உள்ளிட்ட ஏனைய நகரங்களிலுள்ள சலூன்களிலும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

வேறு வலையமைப்புக்கு இலக்கங்களை மாற்ற அனுமதி

அலைபேசி இலக்கங்களை வேறு வலையமைப்புக்கு மாற்றிக்கொள்வதற்கான (Number Portability) வசதியை சட்டரீதியாக வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.



இத்தகவலை இலங்கையின் தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒஷத சேனாநாயக்க, நேற்று (14) உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அனைத்து சந்தாதாரர்களுடனும் (subscribers) ஒரு மைய தரவுத்தளத்தை உருவாக்க இந்த வாரத் தொடக்கத்தில் அனைத்து சேவை வழங்குநர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

விடுதலை செய்

ஸ்ரீ கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த போது கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்கள், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள்: பிரதீப் தில்ருக்ஷன)

இரு வழக்குகளிலும் ரிஷாட்டுக்குப் பிணை

நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ், இரண்டு வழக்குகளிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், நேற்று (14) பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த தலவாக்கலை-டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பிலான வழக்கில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவர் ஐந்தாவது பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில், 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுதலை செய்வதற்கு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய நேற்று (14) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

தொற்று நீக்கி திரவத்தைப் பருகிய

ஈரானிய கைதிகள் இருவர் மரணம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தொற்று நீக்கி திரவத்தைப் பருகிய ஈரானிய கைதிகள் இருவர் நேற்று (14) உயிரிழந்துள்ளனர்.

அந்தத் திரவத்தை பருகிய ஈரானிய கைதிகள் 10 பேர், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

விலைகள் அதிகரித்தமை அரசாங்கத்தின் தவறல்ல

அரசாங்கத்தை நாங்கள் பொறுப்பேற்கும் போது, நாட்டின் பொருளாதார வேகம் 2.2 க்கு குறைந்து இருந்தது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் காமினி லொக்குகே, பொருள்களின் விலைகள் அதிகரித்தமை அரசாங்கத்தின் தவறல்ல என்றார்.

தொடர்ச்சி P2

காஹவத்த வட்டாபொத்தையில் பெரும்பான்மையினர் தாக்குதல்

ரூபன் பெருமாள் ஸ்தலத்துக்கு விரைந்தார்

காஹவத்தை, வட்டபொத்த தோட்டத்தில் வசிக்கும் சிறுபான்மையினர் மீது, பெரும்பான்மையினர் தாக்குதல்களை நடத்தியதுடன், சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த தாயொருவர் உட்பட மூன்று இளைஞர்களும் காஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்டக் குடியிருப்பொன்றும், நான்கு ஒட்டோக்களும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்துள்ளன. தாக்குதல்களுக்கு உள்ளான இளைஞர்களில் ஒருவருக்குச் சொந்தமான சுயதொழிலில் ஈடுபடும் இயந்திரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அவர் அணிந்திருந்த இரண்டு பவுண் தங்க நகையும் அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

2022 முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்த்தல்

முதலாம் தரத்துக்கு 2022 இல் மாணவர்களை உள்ளீர்ப்பது குறித்து முடிவு எடுப்பதற்காக நடத்தப்படும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கான திகதியில் கல்வி அமைச்சு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம் நவம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

குஷிநகர் விமான திறப்புக்கு ஜனாதிபதியும் செல்கிறார்

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தின் குஷிநகரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் எதிர்வரும் புதன்கிழமை இருப்பர் என இந்தியாவின் நியூஸ் 18 இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் 24 பேர் கொண்ட குழு ஒன்றும், 125 புத்த பிக்குகளும் இருப்பர் என நியூஸ் 18 குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

Lk Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

கூட்டமைப்புக்கு 'கூட்டு' தலைமை

செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அத்துடன், அவரின் தனிப்பட்ட கருத்தை, பெரிய விடயமாக பார்க்கத் தேவையில்லை, எனவும் அவர் கூறினார்.

50 சதவீதத்தால் வீழ்ச்சி; இன்று முக்கிய அறிவிப்பு

சில பகுதிகளில் முகக்கவசம் அணிவதை பொதுமக்கள் தவிர்ப்பதாகவும் சுகாதார பழக்கவழங்கங்களை பேணாத பட்சத்தில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து மற்றும் தற்போது அமலில் உள்ள சுகாதார ஒழுங்கு விதிகள் குறித்து இன்று (15) வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ள கொவிட்-19 தொற்றொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படவுள்ளது.

பதுளையில் 10 கொரோனா

ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி இந்த மரணங்கள் அனைத்தும் பதிவாகியதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 20 ஆண்களும் 11 பெண்களும் அடங்குகின்றனர். உயிரிழந்த 31 பேரில் 23 பேர் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் ஆவர்.

அதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,408 ஆக அதிகரித்துள்ளது.

24 இந்திய மீனவர்கள் கைது

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மீனவர்களிடம் இருந்து, 200 கிலோகிராமுக்கு அதிகமான மீன்களும் 2 ரோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கடற்பரப்பில், நேற்று முன்தினம் (13), இவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்த போதே, காங்கேசன்துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரோலர் படகுகள், மயிலிட்டி துறைமுகத்தில் தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு, பிசிஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக, கடற்படை இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என, கடற்படையினர் தெரிவித்தனர்.

5 நாள்களுக்குள் தீர்வு வேண்டும்

"தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் வரை நிகழ்நிலை கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகியிருப்போம்" என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமக்ரீ தர்ம மகா சங்கத்தின் மகாநாயக்கர் இத்தேபான தர்மாலங்கார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் இலவச கல்வியின் தந்தையான சி.டப்ளியூ. டப்ளியூ கன்னங்கராவின் 137 ஆவது ஆண்டு ஜனன தின நிகழ்வு நேற்று முன்தினம் (13) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கோரிக்கையை நேற்று (13) விடுத்தார்.

சிறார்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வேறு வலையமைப்புக்கு இலக்கங்களை மாற்ற அனுமதி

"எண்ணை வரைபடமாக்க மத்திய தரவுத்தளம் தேவை, நாங்கள் மற்ற நாடுகளிலிருந்து இந்தச் செயன்முறையை கற்றுக்கொண்டிருக்கிறோம்" என அவர் மேலும் கூறினார்.

தனியார் நிறுவனங்களின் தொலைத்தொடர்பு கோபுரங்களை அரச தலையீட்டுடன் நிர்மாணிக்கும் போது, அரசாங்கத்துக்கு அதிக இலாபம் கிடைக்கும் என்றார்.

அனைத்து தொழில்நுட்ப செயற்பாடுகளும் நிறைவடையும் பட்சத்தில், 2022 மே முதல் இந்த சேவை நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் பாவனையாளர்கள் ஒரு வலையமைப்பில் இருந்து மற்றொரு வலையமைப்புக்கு மாறினாலும் அவர்களின் தொலைபேசி இலக்கத்தை நிலையாகப் பேண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சலூன்களில் விலை கூடியது அத்தியாவசியப் பொருள்களின்

ஹட்டன்- டிக்கோயா முடித்திருத்துவோர் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், முடி வெட்டுவதற்காக 300 ரூபாய், தாடி வெட்டுவதற்கு 200 ரூபாய், சிறுவர்களுக்கு முடி வெட்டுவதற்கு 200 ரூபாய், முடியை வெட்டி வர்ணம் பூசுவதற்கு 800 ரூபாய், மசாஜ் செய்வதற்கு 200 ரூபாய் என விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலை அதிகரிப்பு தொடர்பில், சலூன்களில் விளம்பரங்களும் ஒட்டப்பட்டுள்ளன.

இன்னும் சில தளர்வுகள் இன்று முதல் அமலாகும்

மதுபான பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து திருமணங்களும் பதிவு திருமணங்களாக மாத்திரமே நடத்த முடியும்.

இதற்கிடையில், ஒரேநேரத்தில் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை, 15ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய வழிகாட்டுதல்களின் படி, பல விளையாட்டு நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உணவகங்களில், இருக்கை திறனுக்கமைய, 30 சதவீதம் வரை, உணவருந்த இடமளிக்கலாம். ஆனால், மதுபானம் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கூட்டங்கள், பயிலரங்குகள், கருத்தரங்குகள் போன்றவற்றை, அதிகபட்சம் 50 பங்கேற்பாளர்கள் கொண்டு ஒரு மண்டபத்தில் நடத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வழக்குகளிலும் ரிஷாட்டுக்குப் பிணை

எவ்வாறாயினும், ரிஷாட் பதியுதீன் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதற்கு மேலதிக நீதவான் தடை விதித்துள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான வழக்கிலும் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காஹவத்த வட்டாபொத்தையில் பெரும்பான்மையினர் தாக்குதல்

யடாகர கிராமத்தில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கும்பலே, தோட்டத்துக்குள் புகுந்து இவ்வாறு தாக்குதலை நடத்தியுள்ளது.

சம்பவத்தை கேள்வியுற்று அத்தோட்டத்துக்குச் சென்றிருந்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபசெயலாளர் ரூபன் பெருமாள், அச்சத்தில் வாழும் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இவ்விடயம் குறித்து இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோருக்கும் ரூபன் பெருமாள் தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை வன்மையாக கண்டித்த ரூபன் பெருமாள், இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களுக்காக தான் துணிந்து நிற்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

2022 முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்த்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் தற்காலிக பட்டியலை, நவம்பர் 30ஆம் திகதிக்கு அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், மேல்முறையீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான திகதி, டிசம்பர் 14 ஆகும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அந்தத் திகதியில் இருந்து 28ஆம் திகதி வரையான இரண்டு வாரங்களுக்குள், மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இறுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் இறுதிப் பட்டியல், ஜனவரி 14ஆம் திகதியன்று வெளியிடப்பட வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

இந்தத் திருத்தங்கள் மாகாண, வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்று, கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

> **"தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் தற்காலிக பட்டியலை, நவம்பர் 30ஆம் திகதிக்கு அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்**

கொரோனா தொற்றுநோய் காரணமாக பாடசாலைகளை மூட வேண்டியிருந்ததால், திகதி திருத்தப்பட்டுள்ளது எனவும், அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முந்தைய சுற்றறிக்கையின்படி, இந்த ஆண்டுக்குள் அனைத்து தேர்வு செயல்முறையும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விலைகள் அதிகரித்தமை அரசாங்கத்தின் தவறல்ல

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு கடன்களை செலுத்தியுள்ளோம். எங்களுடைய அரசாங்கம் எப்படியாவது வெளிநாட்டு கடன்களை செலுத்தும். ஐக்கிய அமெரிக்க டொலரின் விலை அதிகரித்தமையால் பால்மா, கோதுமை மா, காஸ், உள்ளிட்ட பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் தவறால் இவ்வாறு பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றார்.

இன்னும் சில நாள்களில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. 300 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகளை எதிர்வரும் 21ஆம் திகதியன்று திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். கொரோனா தொற்றை வெற்றிக்கொண்டு பாடசாலைகளை திறக்கமுடியும் என யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இந்நிலையில்தான், பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன என்றார்.

குஷிநகர் விமான திறப்புக்கு ஜனாதிபதியும் செல்கிறார்

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்துக்கு கொழும்பிலிருந்து நேரடியாக ஜனாதிபதி ராஜபக்ஷ செல்லவுள்ள நிலையில், அன்றைய தினமே பிரதமர் மோடியால் இவ்விமான நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அந்தவகையில், பிரதான பௌத்த புனித இடமொன்றான குஷிநகரில் தரையிறங்கவுள்ள முதலாவது சர்வதேச விமானமாக இலங்கை விமானம் அமையவுள்ளது. குஷிநகருக்கு இலங்கையிலிருந்து உட்பட உயர் எண்ணிக்கையான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்லுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

ஸ்ரீ கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த போது கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்கள், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள்: பிரதீப் தில்ருக்ஷன)

LK News Updates
Viber Community

இந்திய இராணுவ பிரதானி வருகையில்

பாரிய சந்தேகம் மறைந்து உள்ளது

பிராந்தியத்திலுள்ள பெறுமதிக்க சொத்துகளை கொள்ளையிடுவதற்கே இந்திய இராணுவ பிரதானி இலங்கைக்கு வந்துள்ளார். ஆனால், யுத்தக் காலத்தில்கூட இவர் இலங்கைக்கு வரவில்லை முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கூறியே, தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. கடந்த அரசாங்கம் வழங்கிய நாட்டின் சொத்துகளை மீட்பதாகவும், நாட்டின் சொத்துகளை விற்பனை செய்யப்போவதில்லை எனவும் இந்த அரசாங்கம் கூறியது. எனினும் தற்போதைய அரசாங்கத்தின்

கீழும் நாட்டின் சொத்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நாட்டுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்துகள் நாட்டின் பொருளாதாரத்துக்காக பலி கொடுக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார். அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான போட்டித் தன்மைக்கு, இலங்கை இலக்கு வைக்கப்படுகிறது. இந்திய இராணுவ பிரதானி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். உலகின் பலமிக்க இராணுவத்தின் பிரதானியாக அவர் இருக்கிறார்கள். யுத்தக் காலத்தில் கூட இவர்கள் இலங்கைக்கு வந்தது கிடையாது எனவும் தெரிவித்தார்.

பிராந்திய யுத்த பலத்தை பலப்படுத்தவே இந்திய இராணுவ பிரதானி நாட்டுக்கு வந்துள்ளார். பிராந்தியத்தில் உள்ள பெறுமதியான சொத்துகளைக் கொள்ளையிடுவதற்காகவே அவர் இங்கு வந்துள்ளார் எனவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் இதன்போது கூறினார்.

அரசாங்க ஊழியர்களுக்கு

அக்ரஹாரவிலிருந்து இழப்பீடு வழங்கவும்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் அரசாங்க ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி நிதியிலிருந்து இழப்பீடுகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலான திட்டம் ஒன்றை வகுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கம், ஒருங்கிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க சேவையை செயல்திறன் மிக்கதாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் தொழிற் சங்கத்தினர் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். அரசாங்க நிறுவனங்களின் செயல்திறன், உற்பத்தி திறனை மேம்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டிய பிரதமர், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் செயற்பாடும் அதற்கு அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டின் பின்னர் அரசாங்க சேவையில் இணைந்து கொண்டவர்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இழந்த ஓய்வூதிய கொடுப்பனவை மீண்டும் பெற்றுக்கொள்வது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் கோரிக்கை தொடர்பில் ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மின்தடையில் 8 வயதான சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞன் கைது

பாலித ஆரியவன்ச

மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில், அதனைத் திருத்துவதற்காக வீட்டுக்கு வரவழைக்கப்பட்ட உறவுக்கார இளைஞன், அவ்வீட்டிலிருந்த எட்டுவயதான சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவமொன்று பண்டாரவளையில் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட எட்டுவயதான சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் நேற்று (13) கைது செய்யப்பட்ட 19 வயதான இளைஞனை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: அச்சிறுமியின் வீட்டில் சமையலறையுடன் மற்றுமோர் அறை மட்டுமே உள்ளது. அவ்வீட்டுக்கு மின்சாரம் கடந்த 12ஆம் திகதி இரவு திடீரென தடைப்பட்டுள்ளது.

அதனை திருத்துவதற்காக அவ்விளைஞனை வீட்டுக்கு அழைத்துள்ள தாய், குப்பி இலாம்பை சமையலறையில் வைத்து, பற்றவைத்துள்ளார்.

இந்நிலையில், அறையின் கட்டிலில் படுத்திருந்த சிறுமியை, அவ்விளைஞன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கோவிலுக்குள் காலணி; செந்தில் கண்டனம்

அனைத்து மதக் கொள்கைகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் கோவில் வளாகத்திற்குள் காலணி அணிந்து சென்ற பொலிஸ் அதிகாரியின் இந்த நடவடிக்கை கடுந்தொனியில் கண்டித்துள்ள இ.தொ.காவின் உப தலைவரும்,பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் விசாரணைக்கும் பணித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த இந்து கலாசார துறைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும். மேலும் சம்பவத்தின் போது உரிய நடவடிக்கை எடுக்காமைக்கு கோவில் நிர்வாகத்திடம் விளக்கம் அளிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

கோட்டாவுக்கு தயாசிறி தாழ்மையாக எடுத்துரைத்தார்

இரசாயன பசளைகளுக்கு தடைவிதிக்க எடுத்த தீர்மானத்தை சில காலங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் மிகவும் தாழ்மையுடன் கோரிக்கை விடுப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், சரியான முறைகளை உருவாக்கியதும் இயற்கை பசளை தொடர்பான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் அவர் கோரியுள்ளார்.

குருநாகலில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவ்வாறு செய்யவில்லை என்றால், பெரிய அழிவு ஏற்படும் எனவும் தனக்கும் வீதியில் இறங்கி செல்ல முடியாத நிலைமை உருவாகலாம் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் பௌத்த பாரம்பரியம் தொடர்பான

ஆவணப்படம் பிரதமரால் வெளியிடப்படும்

பாகிஸ்தானின் பௌத்த பாரம்பரியத்தை உள்ளடக்கிய ஒரு கலை ஆவணப்படம் இலங்கையில் பிரதமரால் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வர்த்தக மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையில் காணப்படும் பாகிஸ்தானின் பௌத்த சுற்றுலாத்துறைக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தொனிப்பொருளில் அண்மையில் இணையதள கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இணையதள கலந்துரையாடலில் தொடர்ந்து உரையாற்றிய பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமத், பாகிஸ்தானின் பௌத்த பாரம்பரியத்தை உள்ளடக்கிய ஒரு கலை ஆவணப்படம், குறிப்பாக இலங்கையில் இருந்தும் பொதுவாக உலக பௌத்த மக்களிடம் இருந்தும் மத சுற்றுலாவுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும் என



நம்பப்படுகிறது.

இலங்கையில் பாகிஸ்தானின் பௌத்த பாரம்பரியத்தை ஊக்குவிப்பதும், இரு தரப்பிலுமுள்ள பயண முகவர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுக்கு இடையில் இலங்கையில் பாகிஸ்தானின் பௌத்த சுற்றுலாவின் சாத்தியப்பாட்டை ஆராயும் ஒரு தளத்தை வழங்குவதுமே இவ்விணையதள கலந்துரையாடலின் நோக்கமாகும் என பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமத் தெரிவித்தார்.

இதன்போது, கொழும்பு கங்காராமாய விகாரையின் பிரதம தேரர் கலாநிதி கிரிண்டே அசாஜி தேரர் கருத்துத்தெரிவிக்கையில், இலங்கையில் பாகிஸ்தானின் பௌத்த சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதை வரவேற்றதுடன், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கான உயர்மட்ட பௌத்த மதகுருக்கள் தூதுக்குழுவின் பாகிஸ்தான் விஜயத்தின் போது அவரது மறக்கமுடியாத பயண அனுபவத்தையும் நினைவுபடுத்தினார்.

மேலும், பௌத்த பாரம்பரியத்தை பாதுகாப்பதில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் முயற்சிகளை சுட்டிக்காட்டிய அவர், பாகிஸ்தான் இலங்கையின் பௌத்த சுற்றுலா பயணிகளுக்கான ஒரு நவீன, தனித்துவமான இடமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏறாவூரில் புதிய விசேட துணி உற்பத்தி வலயம்

இலங்கைக்கு பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை கொண்டு வரக்கூடிய 400 ஏக்கர் பரப்பில் புதிய விசேட துணி உற்பத்தி வலயத்தை அமைக்க அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு உயர் தரத்திலான துணிகளின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு இதுவரை ஏறாவூர் பகுதியில் இரண்டு தொழிற்சாலைகள் விருப்பம் தெரிவித்திருப்பதாக இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் பசன் வணிகசேகர இதன்போது தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள ஏனைய தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் வரி நிவாரணங்களை விட மேலதிக நன்மைகள் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுமாயின் அது நியாயமற்றது என இது தொடர்பில் தனது கருத்தை முன்வைத்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா சுட்டிக்காட்டினார்.

நாடு தற்பொழுது முகங்கொடுத்துவரும் நிலைமையில், இவ்வாறான முதலீட்டு வாய்ப்புக்கள் மிகவும் முக்கியமானது என ஏற்றுக்கொண்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, எனினும் அனைத்து துணி உற்பத்தியாளர்களுக்கும் சம வாய்ப்புக்கள் மற்றும் வரி நிவாரணங்கள் வழங்கப்படுவது அவசியம் என சுட்டிக்காட்டினார்.

அந்தத் திருத்தங்களுக்கு அமைய ஏறாவூர் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த விசேட துணி உற்பத்தி வலயத்துக்கு குழுவின் அனுமதி வழங்கப்பட்டது எனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார் .

கடன் வழங்கும் நாடாக இலங்கை இருக்க வேண்டும்

வெளிநாடுகளுக்கு கடன் வழங்கும் நாடாக இருக்க வேண்டிய இலங்கை, வெளிநாடுகளில் இருந்து கடனை பெற்றுக்கொள்ளும் நாடாக இருக்கக்கூடாதென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, அரசியலுக்கு வருவது சம்பாதிப்பதற்கே எனக் கூற முடியாது. சிலர் அவ்வாறு செயற்படுகிறார்கள். இதனாலேயே மக்கள் இவ்வாறு நினைக்கிறார்கள் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மக்களாலேயே தாம் தெரிவு செய்யப்பட்டதை மக்கள் பிரதிநிதிகள் மறந்துவிடுகின்றனர். வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற்றுக்கொள்ளும் நாடாக அல்லாது, வெளிநாடுகளுக்கு கடனை வழங்கும் நாடாக இலங்கை இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர இதன்போது கூறினார்.

மயூராபதி நவராத்திரி பூஜையில்

சஜித் பங்கேற்பு

வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் இன்று 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நவராத்திரி தின சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இதுவேளை,விஜயதசமி நிகழ்விலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து சிறப்பிப்பார் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விலை அதிகரிப்பு தற்காலிகமானதே

அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பானது, நாட்டில் ஏற்பட்டிருக்கும் தற்காலிக நெருக்கடியே. மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும். விரைவில் தீர்வு வழங்குவோம் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மகசிதுல நீர்த்தேக்க நிர்மாணிப் பணிகளை பார்வையிட அண்மையில் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் சென்றிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மின் உற்பத்தி நிலையங்களை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ஒப்பந்தங்கள் இருந்தால் அவற்றில் கையெழுத்திடப்பட வேண்டும். முதலீட்டாளர்கள் வரும்போது ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமல் இருக்க முடியாது. ஒரு முதலீட்டாளர் வரும்போது விரைவில் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு முடிக்க நாட்டின் நிர்வாகத்துக்கு திறமை இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அது அமெரிக்க முதலீட்டாளர்களா, சீன முதலீட்டாளர்களா, இந்திய முதலீட்டாளர்களா, ஜேர்மன் முதலீட்டாளர்களா என்பது பிரச்சினை கிடையாது. முதலீட்டாளர்களை கொண்டுவர முடியாது என்று எதிர்க்கட்சி கூறியது. இப்போது முதலீட்டாளர்கள் வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்த கொரோனா தொற்றுநோய் இருக்கும் நேரத்தில் முதலீட்டாளர்கள் வந்துள்ளது குறித்து மகிழ்ச்சி அடைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, எரிவாயு விலை

உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை உயரும் அறிகுறிகள் இருப்பதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இவை அனைத்தும் தற்காலிகமான பிரச்சினைகள். இது ஒரு தற்காலிக நெருக்கடி நிலையாகும். கொரோனா தொற்றுநோயால் தான் இந்த நெருக்கடிகள் வந்தன. இந்த அனைத்தும் சில வாரங்களில் குறைந்துவிடும். பொறுமையாக இருக்குமாறு மக்களிடம் கோருகிறோம் என்றார்.

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க [illegible]

[illegible]

கம்பனியின் இல : P - V [illegible]

[illegible]

LK Newspapers Viber Community

இந்திய அத்துமீறல் விவகாரம்: டக்ளஸ் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு

"துணைநிற்போம்"

இணைந்து செயற்படத் தயார் என்கிறார் செல்வம்

■ எஸ்.ஹொரேரியன் லெம்பேட்

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமது மீனவர்களைக் காப்பாற்ற வேண்டிய நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அதற்கான நடவடிக்கைளை அவர் எடுக்கும் போது, அவருடன் சேர்ந்து செயற்படத் தயாராக இருக்கிறோம் எனவும் கூறினார்.

அத்துடன், இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட தமது மீனவர்களுக்கு, உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும், அவர் வலியுத்தினார். மன்னாரில், நேற்று (14) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், உர விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் தீர்மானத்தால், இலங்கை பாரிய பஞ்சத்தை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உரத்தை வழங்கி, விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். விவசாயிகளுடனும் விவசாய அமைப்புகளுடனும் கலந்துரையாடி வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

13ஐ நடைமுறைப்படுத்தும் முறைமையை

இந்தியா செயற்படுத்த வேண்டும்

■ எஸ்.ஹொரேரியன் லெம்பேட்

13ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்படுகின்ற அனைத்து விடயங்களையும் நடைமுறைப் படுத்துகின்ற ஒரு வழியைக் கையாளுகின்ற முறைமையை, இந்தியா செய்ய வேண்டும் என, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாறி மாறி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை தெரிவிக்கிறார்கள்.

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் எங்களுடைய கோரிக்கை பிரதானமானதாக உள்ளதாகத் தெரிவித்த அவர், அதிகாரம் இல்லாத மாகாண சபையை நாங்கள் ஏற்றுக் கொண்டு, அதனூடாக எங்களது நிலங்களைப் பாதுகாப்பது, எமது பிரச்சினைகளைக் கையாள்வது என்பது கேலித்தனமான விடயமெனவும் கூறினார்.

எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியதன் பின்னர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பது தான் சிறந்ததாக அமையும். இந்தியா இவ்விடயத்தில் முனைப்புடன் செயற்பட வேண்டும் எனவும், செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கலந்துரையாடல்...

கிளிநொச்சிக்கு, நேற்று (14) காலை 11 மணியளவில் விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்னன், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரனின் அலுவலகத்தில், கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். (படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

விபத்தில் இருவர் படுகாயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், செந்தூரன் பிரதீபன்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பகுதியில், நேற்று (14) பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து யாழப்பாணத்தை நோக்கி பயணித்த ஒட்டோவை, யாழ்ப்பாணத்தில் இருந்து மின்கம்பங்கள் ஏற்றிவந்த வாகனம் மோதியுள்ளது.

இதன்போது, ஒட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆசனவாய்க்குள் ஹெரோய்ன் கடத்தல்

■ செந்தூரன் பிரதீபன்

ஆசனவாய்க்குள் ஹெரோய்னை ஒழித்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த வயோதிபர் ஒருவர், நேற்று முன்தினம் (13) கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, குறித்த வயோதிபர், பஸ்ஸில் இருந்து இறங்கும்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்து சோதனையிட்ட போது, 2 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோய்ன் ஆசன வாய்க்குள் இருந்தமை தெரியவந்தது.

மீன்பிடிக்கச் சென்றவர் பலி

■ ச.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, செம்மலை பகுதியில் அமைந்துள்ள பெரியகுளத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், சுழியில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவபாதம் ஸ்ரீ சங்கர் என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் (13) மாலை, செம்மலை பகுதியில் உள்ள பெரியகுளத்தில் மீன்பிடி தொழிலுக்காக சென்ற குறித்த குடும்பஸ்தர், குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சுழியில் அகப்பட்டு, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கட்சிப் போராளிகள், மு.காவில் பிளவை ஏற்படுத்தும்

சூழ்ச்சிகளுக்கு துணை போகார்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் சூழ்ச்சிகளுக்கு, கிழக்கு மாகாணத்தை சேர்ந்த எமது கட்சிப் போராளிகள் ஒருபோதும் துணை போகமாட்டார்கள் என, அக்கட்சியின் சாய்ந்தமருது மத்திய குழு அறிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி மத்திய குழு சார்பாக அதன் செயலாளரும் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஜலால்தீன், நேற்று (14) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

சமீப காலமாக, எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் நோக்கில், கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராக, கிழக்கு மாகாணத்தில் சவால் விடுக்கப்படுவதாக வெளியிடப்படும் கருத்துகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையிலும் தென்னிலங்கை பெரும்பான்மை சமூகத்தினருடனான நல்லுறவுக்குமான ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்கின்ற ஒரே தலைமையாக ரவூப் ஹக்கீம் திகழ்கிறார்.

2,000ஆம் ஆண்டு ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் திடீர் மறைவைத் தொடர்ந்து ரவூப் ஹக்கீம், இக்கட்சியைப் பொறுப்பேற்று, இன்றுவரை பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட பாரிய சவால்களுக்கு எல்லாம் தைரியமாக முகங்கொடுத்து, அச்சவால்களையெல்லாம் வெற்றிகொண்டு, கட்சியை மிகவும் கட்டுக்கோப்புடன் வழிநடத்தி வருகிறார்.

அனைத்து விடயங்களிலும் முன்மாதிரியாகத் திகழ்கின்ற எமது கட்சியையும் அதன் தலைமைத்துவத்தையும் பலப்படுத்த வேண்டிய கடப்பாட்டை எமது கட்சிப் போராளிகள் கொண்டிருக்கிறார்கள். இது விடயத்தில் அவர்களிடம் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

கட்சியில் பிரிவினையைத் தோற்றுவிக்க எத்தனிக்கும் வெளிச்சக்திகளின் தூண்டுதல்களுக்கு எமது போராளிகள் ஒருபோதும் துணை போக மாட்டார்கள் என்பது திண்ணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காதல் வலை விரித்து

சிறுமி துஷ்பிரயோகம்; நபருக்கு விளக்கமறியல்

■ எம்.முபாரக்

திருகோணமலை, தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 13 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சந்தேகநபரை, இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதிமன்ற நீதவான் விசாணி தேனவது உத்தரவிட்டார்.

கல்மெட்டியாவ, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், அதே பகுதியிலுள்ள மேற்படி சிறுமியை காதலித்து வந்துள்ளதோடு, திருமணம் செய்வதாகக் கூறி பல தடவைகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

சந்தேகநபர் தொடர்பாக சிறுமியின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய அவரைக் கைது செய்துள்ளதாகவும் சந்தேகநபரை, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (13) ஆஜர்படுத்திய போதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சிறுமி, மருத்துவ பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தம்பலாகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிப்பள்ளியில்

கப் விபத்து; ஒருவர் காயம்

■ நூருல் ஹுதா உமர்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காரைதீவு, மாவடிப்பள்ளி பிரதான வீதியில், மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் நேற்று (14) காலை இடம்பெற்ற கப் ரக வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கப் ரக வாகனம், பாலத்தில் மோதுண்டு பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதுடன், வாகனத்தின் சாரதியே காயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

■ ரீ.எல்.ஜலீல்கான்

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் நேற்று (14) அதிகாலை 1 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில், வீடொன்றில் கசிப்பு உற்பத்தியை முன்னெடுத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

50,000 மில்லி லீற்றர் கசிப்பு, 40,000 மில்லிலீற்றர் கோடா, கசிப்பு தயாரிக்கும் பெருமளவு உபகரணங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஐ.பி. பண்டார தெரிவித்தார்.

கிடைக்கப் பெற்ற தகவலொன்றையடுத்தே, கிரானிலுள்ள குறித்த வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், கசிப்பைக் கைப்பற்றியதுடன், சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.

கொரோனா மரணங்கள் வீழ்ச்சி;

நல்லடக்கமும் குறைகின்றது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் கொரோனா மரணங்கள் வீழ்ச்சி அடைந்துள்ளதால் தற்போது நாளொன்றுக்கு 5 முதல் 10 வரையான சடலங்களே, ஒட்டமாவடி, மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கத்துக்கு வருவதாக, ஒட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்யும் மஜ்மா நகர் மையவாடியில், நேற்று முன்தினம் (13) வரை 3,120 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

அந்தவகையில், கடந்த 7 ஆம் திகதி 5 சடலங்களும் 8 ஆம் திகதி 9 சடலங்களும் 9ஆம் திகதி 2 சடலங்களும் 10ஆம் திகதி 1 சடலமும், 11ஆம் திகதி 4 சடலங்களும், 12ஆம் திகதி 6 ஆறு சடலங்களும், 13ஆம் திகதி 1 சடலமும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில், நாளொன்றில் ஆகக் குறைந்த சடலம் 13ஆம் திகதி ஒரு சடலமும், ஆகக் கூடிய சடலங்கள் ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி 57 சடலங்களும் நல்லடக்கம் செய்யப்பட்டன.

விகாரை அமைக்க

விவசாயக் காணிகள் அபகரிப்புக்கு எதிர்ப்பு

■ ஒலுமுதீன் கியாஸ், ஏ.எம்.கீத், அ.அச்சுதன்

மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் 64ஆம் கட்டை மலையில் அமைக்கப்படவுள்ள பௌத்த விகாரைக்காக, விவசாயக் காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்று (14) காலை கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மலையைச் சூழவுள்ள, பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து, இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் பொதுமக்கள் உட்பட முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்; மாற்று காணி வேண்டாம்', 'எங்கள் காணிகளில் விவசாயம் செய்வதற்கு எங்களிடம் வாடகை கேட்காதே', 'மூதூர் முஸ்லிம், தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதை உடன் நிறுத்து' போன்ற கோஷங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

LK Newspapers Vibe Community

விலை அதிகரிப்பை அடுத்து

உணவு வகைகள் சிறியதாகின

உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் ஹோட்டல் உரிமையாளர்களால் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, நாளாந்தம் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அத்துடன், அவற்றின் அளவுகளும் சிறியதாகிவிட்டன.

கோதுமைமா, காஸ், உளுந்து, தேங்காய் எண்ணெய், அரிசி உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால், ஹோட்டல்களைக் கொண்டுநடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மாற்றீடாக, உணவுப்பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ள அதேவேளை அவற்றின் அளவையும் குறைத்துள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பரோட்டா, வடை, தோசை உள்ளிட்ட உணவுப் பண்டங்களின் அளவே குறைக்கப்பட்டுள்ளன; விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனால், ஒருவேளை சாப்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளவேண்டிய உணவின் அளவை இரண்டு மடங்காக எடுக்கவேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ள நுகர்வோர். இல்லையேல் பசியை ஆற்றமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றனர்.

ஹோட்டல்களை கொண்டு நடத்தவேண்டுமாயின் இவ்வாறான மாற்றீடுகளைத் தவிர, வேறு வழிகள் தங்களிடத்தில் இல்லையென ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பஞ்சத்தை தடுக்க முடியாது

■ டிஷங்கீதன்

இலங்கை ஒரு விவசாய நாடு; விவசாயத்துறையை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் இலங்கையில் பாரிய உணவுப் பஞ்சம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது எனத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் விவசாயிகளை அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுவரெலியாவில், நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கருத்துரைத்த அவர், நாட்டில் தற்பொழுது நிலவும் இரசாயன உரத்தட்டுப்பாடு காரணமாக, விவசாயத்தை மாத்திரம் தமது ஜீவாதார தொழிலாக் கொண்டு செயற்படும் விவசாயிகள் தங்களது விவசாயத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர் என்றார்.

நுவரெலியா மாவட்ட விவசாயிகள், தாம் பயிரிடும் விவசாயப் பயிர்களுக்கு உரிய நேரத்தில் தேவையான உரத்தை வழங்க முடியாது, விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் இருக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் இரசாயன உரம், கிருமிநாசினி தட்டுப்பாடு காரணமாக, உருளைக்கிழங்கு, மரக்கறி உட்பட சகல விதமான விவசாய பயிர் செய்கையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயத்தை மாத்திரம் நம்பி வாழும் விவசாயிகளின் குடும்பங்கள், வாழ்வாதார துன்பங்களுக்குத் தற்போது முகம் கொடுத்து வருகின்றனர் என்றார்.

பாக்கு விலை குறைகையில் வெற்றிலை விலை கூடியது

■ கிந்திக அருண குமார

கொவிட்-19 தொற்றுக்குப் பின்னர் வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாத்தளை, நாவுலவில் பாக்கின் விலை குறைந்ததுடன் வெற்றிலையின் விலை கூடியுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் பாக்கு ஒன்றின் விலை 20 ரூபாயாக இருந்தது. எனினும், தற்போது அந்த விலை 10 ரூபாயால் குறைந்துள்ளது.

இதேவேளை, வெற்றிலையின் விலை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வெற்றிலை ஒன்றின் விலை 2 ரூபாய்க்கும் 3 ரூபாய் 50 சதத்துக்கும் இடைப்பட்ட விலையில் விற்பனையாகிறது.

மழைபெய்வதால் பாக்கு உற்பத்தி அதிகரித்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பாக்குகள் நாவுலவுக்கு கிடைப்பதால், பாக்கின் விலை குறைந்துள்ளது என நாவுல வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

மழையால் வெற்றிலை அறுவடை குறைந்துள்ளது. இதனால், வெற்றிலையின் விலை அதிகரித்துள்ளது என்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

போதையில் ஓட்டிய சாரதி சிக்கினார்

■ ராமு தனராஜா

மடுல்சீமையிலிருந்து யூரி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஒட்டோவை மடுல்சீமை பொலிஸார் சோதனைக்கு உட்படுத்திய போது, சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலிஸார், ஒட்டோவையும் கைப்பற்றியுள்ளனர். பசறை யூரி பகுதியைச் சேர்ந்த 31 வயதான சாரதியை, ஒட்டோவுடன் பசறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

தள்ளுவண்டியைத் தள்ளி உடைத்து தோட்ட நிர்வாகம் அட்டகாசம்

■ சே.தி.பெருமாள்

அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காக தள்ளு வண்டியில் சோளம் விற்று வந்த நபரின் தள்ளு வண்டியை, தோட்ட உதவி அதிகாரிகள், காவலாளி ஆகியோர் இணைந்து கீழே தள்ளிவிட்டு, உடைத்து விட்டனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது விடயமாக சம்பந்தப்பட்ட தள்ளு வண்டி வியாபாரியான பண்ணடியான் ரவி காந்தன் (வயது 40) இரண்டு குழந்தைகளின் தந்தை கூறுகையில், "எனது மனைவி நோய்வாய்ப்பட்டவர். தோட்ட வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும், சோளம் அவித்து தள்ளு வண்டியில் வைத்து, ப்ரௌன்ஸ்வீக் - மஸ்கெலியா நகர் வரை விற்பனை செய்து வந்தேன்.

கொவிட்-19 தொற்று, ஆரம்பமானது முதல் எனது விற்பனையும் நிறுத்தப்பட்டது. நானும் எனது தள்ளு வண்டியை ப்ரௌன்ஸ்வீக்-புளும்பீல்டு பகுதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான இடத்தில் நிறுத்திவைத்தேன். எனினும், விற்பனை அனுமதியை, மஸ்கெலியா பிரதேச சபையில் முறையாகப் பெற்றுள்ளேன். நேற்று முன்தினம் (13) தோட்ட உதவி முகாமையாளர்கள், அவ்விடத்திலிருந்து தள்ளு வண்டியை அப்புறப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனால், இருள் சூழ்ந்து விட்டதால், நாளை காலை அப்புறப்படுத்துவததாக கூறினேன்.

அதனை கேட்டுக்கொண்டு சென்றுவிட்ட உதவி முகாமையாளர்கள், தோட்ட காவலாளியுடன் ஒரு மணிநேரத்துக்குப் பின்னர் வந்து, அந்தத் தள்ளுவண்டியை கீழே தள்ளிவீழ்த்தி உடைத்துவிட்டனர். அத்துடன், அவ்விடம், தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமானது என பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்துள்ளனர்" என்றார்.

சரஸ்வதி பூஜை

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சரஸ்வதி பூஜை, ஹட்டன் தலைமைப் பணிமனையில் நேற்று (14) நடைபெற்றது. பொதுச் செயலாளர் எஸ். பிலிப், பிரதி நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் ஆகியோர் காளாஞ்சி பெறுவதையும் கலந்து கொண்ட பணிமனை உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: துவாரக்ஷான்)

கொடி வழங்கி வைப்பு

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தால், இராணுவ வீரர்களின் கொடிகள் விநியோகம் செய்யும் உத்தியோகப்பூர்வ நிகழ்வு, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 18 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மேற்படி இராணுவ வீரர்களின் கொடிகள் விநியோகம் செய்வதற்கென பிரதேச செயலாளர்களிடம் கையளிகக்கப்பட்டது.

மேற்படி இராணுவ கொடிகள் விநியோகத்தில் கிடைக்கும் ஆதாயங்களை இராணுவ வீரர்களின் நலனுக்காக பயன்படுத்தப்படும்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி, ஆளுநரின் செயலாளர் பிரபாத் உதாகர, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி கொலக்குபோத்தாகம உட்பட பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும் சிவாணி ஸ்ரீ)

நவராத்திரி பூஜை

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 06 மாவட்டங்களிலுள்ள 09 கோவில்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நவராத்திரி சிறப்பு பூஜைகள், வழிபாடுகளின் ஏழாம் நாள் பூஜை மாத்தறை,தெனியாய அருள் மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலில் நடைபெற்றது.

அமைப்பின் சிரேஷ்ட அங்கத்தவர் சங்கர் கவிதா, பிரியதர்ஷனி குடும்பத்தாரின் உபயத்தோடு தெனியாய என்சல்வத்தை தமிழ் வித்தியாலய அதிபர் வி. உதயகுமார் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றிருந்தது. (படங்களும் தகவல்களும் ராமு தனராஜா)

உதவிய கரங்கள்

மாத்தளை இலங்கை மின்சார சபை ஊழியர் சஹானின் ஏட்பாட்டில் வணக்கத்துக்குரிய மலேசிய நாயக்கத்தேர பூட்டாவத்த சரணங்க தேரரின் நிதியுதவியின் மூலம் வண. புலத்வெல் கந்துரே சுகத்த தம்மா தேரர், வண. மாத்தளை சுநீத்த தேரரின் வழிக்காட்டலில் உதவிகள் வழங்கப்பட்டன.

மாத்தளை ஒவிலிகந்த தமிழ் வித்தியாலயம், மாத்தளை இறத்தோட்ட இந்து கல்லூரியில் கல்வி பயிலும் வருமானம் குறைந்த மாணவர்களுக்கு நிகழ்நிலை கற்றலுக்கான smart phone கள் வழங்கப்பட்டன. இதனை ஏற்பாடுசெய்து கொடுத்த ஆசிரியர் க.ராஜரட்ணத்திற்கு பாடசாலை சமூகம் நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளது.

(படங்களும் தகவலும் மெய்யன்)

LK Newspapers Viber Community

மத விழுமியங்களைக் கற்றுக்கொடுத்தல் மனக்கசப்புகளுக்கு வித்திடாது

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதிலும் கடைப்பிடிப்பதிலும் ஆகக்கூடிய பங்கு பொலிஸாருக்கே உள்ளது. ஆனால், சிற்சில சம்பவங்களைப் பார்க்குமிடத்து, போதியளவு பயிற்சி வழங்கப்படவில்லை என்றே எண்ணத் தோற்றுகின்றது.

பல்லினங்கள் வாழும் ஒரு நாட்டில், சகல இனங்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறான மொழிகளைப் பேசுவர்; மதங்களைப் பின்பற்றுவர்; பல வழிபாட்டு முறைமைகளைப் பின்தொடர்வர். இவை தொடர்பில், பொலிஸாருக்கு அறிவுரைகளை வழங்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பொலிஸ் நிலையங்களில், தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியமை, சந்தேகநபர்களை மரணிக்கச் செய்தல், பெண்கள் அல்லது சிறுமிகளை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தல், பாலியல் ரீதியாகச் சீண்டுதல் உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம். இதனால், சட்டம், ஒழுங்கை அமல்படுத்தும் பொலிஸார் மீதான நம்பிக்கைகள், ஆங்காங்கே சந்தேகத்தைத் தோற்றுவித்திருந்தன.

ஆனால், காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி, மத நியதிகளை மீறி, வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில்களுக்குள், பாதணியை கழற்றாமல் திரிந்துள்ளமை, முகம்சுளிக்கச் செய்துள்ளது.

வேண்டுமென்றே இவ்வாறு கோவில்களுக்குள் சென்றாரா? அல்லது கோவில் நிர்வாகங்கள் அறிவுறுத்தியும் அதனைச் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லையா, என்பதெற்கெல்லாம் விசாரணைகளின் பின்னரே விடைகிடைக்கும். உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுமா, என்பதெற்கெல்லாம் காலமே பதில் சொல்லும்.

சட்டம், ஒழுங்கைப் பின்பற்றவேண்டிய ஒரு பொறுப்புமிக்க அதிகாரத்தில் இருக்கும் பொறுப்பதிகாரி, கோவிலுக்குள் நுழையும் போது, எவ்வாறு செல்லவேண்டும் என்பது தொடர்பில் தெரிந்திராமல் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆகையால், வேண்டுமென்றுதான் சென்றிருக்கிறார் என்பதே யூகமாகும்.

நாட்டு மக்களிடத்தில் ஒற்றுமையைப் பேணவேண்டுமாயின், சட்டம், ஒழுங்கு சரியாகவும் எவ்விதமான பாரபட்சமும் இன்றி, அச்சொட்டாகப் பின்பற்றவேண்டும். ஓர் அதிகாரியே இவ்வாறு தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டார் என்றால், அவருக்குக் கீழிருக்கும் சாதாரண பொலிஸார், எவ்வாறு நடந்துகொள்வார்கள்?

எந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அதிகாரத்தில் இருப்போர், முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும். தனக்குக் கீழிருப்பவர்களுக்கு சரியானதை வழிகாட்டவேண்டும். இல்லையேல், 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையிலும்' என்பதுபோல, ஏனையோருக்கும் தொற்றிக்கொள்ளும்.

இவ்வாறான மத நிந்திப்புகள், மனக்கசப்புகளுக்கு வித்திட்டுவிடும். அதுவே, ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள், பிற மதங்கள் சார்ந்த விழுமியங்களைப் பின்பற்றக்கூடாது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமே இல்லை.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் ஒழுங்காக இருக்குமாயின், அநேக பிரச்சினைகள் தோன்றம் பெற்றிருக்காது. சிலரின் அதி திமிர்த்தனத்துடனான நடத்தை, இனங்களுக்கு இடையில் விரிசலையும் மனக்கசப்புகளையும் ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

உயிர்களை நேசிப்பது, முழு உலகத்துடன் தோழமை கொள்வது போலாகும். "நாங்கள் எவருக்கும் எதிரிகள் அல்ல; தீயவர் பேச்சுகளைக் கண்டுகொள்வதுமில்லை". இதுபோன்ற உறுதிமொழிகளை நெஞ்சில் நிறைத்துக்கொண்டு, யாவரும் எம்மவர்கள் எனும் கொள்கையின் பாதையில் பயணித்திட வேண்டும்.

பலமில்லாத அடித்தட்டு மக்களை, உயர்த்தாதவரை உலகம் செயல் குறைந்த நிலையிலேயே இருக்கும். இன்னமும் எல்லா நாடுகளிலும் மக்கள் பொருளாதார சமநிலை உடையவர்களாக இல்லை.

மக்களை நேசிக்காதவர்கள், வையகத்தில் இருந்து, தாமாகவே விலகியவர்களாகவும் விலக்கப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். நாகரிகம் வளர்ந்து விட்டதாகச் சொல்லுகின்றோம். மக்களை நேசிக்காத நாகரிகத்தால் முழுமை இல்லை. புறவாழ்வில் பகட்டாக நடித்தல், தன்னைத்தான் அவமதித்தல் போலாகும். இன்று, வாழும் உரிமை, சுதந்திரம் பல நாடுகளின் மக்களுக்கு இல்லாமல் போவது அச்சத்தையூட்டுகின்றது. மனிதாபிமானம் மகாதர்மம். இதை உணர்வது நலம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

கடிதங்கள்

கைவிடப்பட்ட கலாசார மண்டபத்தை

கற்றலுக்கு வழங்கவும்

நுவரெலியா, நானுஓயா, கிரிமிட்ய 476A கிராம சேவகர் பிரிவில், கிரிமிட்ய நகருக்கு அண்மையில், 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கலாசார மண்டபம், இது வரையில் பூர்த்திசெய்யப்படாமல் இருக்கின்றது.

இக்கட்டடத்தைப் புனரமைப்புச் செய்து, நானுஓயா டெஸ்போர்ட் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு வழங்குமாறு, பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. டெஸ்போர்ட் தமிழ் மகா வித்தியாலயம், கற்றலுக்கு ஏற்ற கட்டட வசதி இல்லாமலும், அடிப்படை வசதிகள் இல்லாமலும் காணப்படுகின்ற போதிலும், 2019ஆம் ஆண்டு கா.பொ.த (சா/த) 64 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர்.

இவர்களில், அதிகமான மாணவர்கள் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வியை தொடரவுள்ளனர். எனவே, இதற்குப் போதுமான கட்டடம், தளபாடம் போன்ற பௌதீக வளங்களும் போதிய ஆசிரியர்களும் தேவைப்படுகின்ற இவ்வேளையில், இப்பாடசாலைக்குப் புதிய கட்டட வசதி கிடைப்பது பெரும் பேறாகும். ஆகையால், கைவிடப்பட்ட கலாசார மண்டபத்தைப் புனரமைப்புச் செய்து, மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு கொடுக்குமாறு, பழைய மாணவர் சங்கமும் கல்விச் சமூகமும் கோரிக்கை விடுத்துள்ளன.

டீ. சந்து

ஐ.எம்.எவ் கடன்:

நம்பிக்கையைக் கழுவேற்றல்

தெ. ஞானசீர்த்தி
மீநிலங்கோ

இலங்கை, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒருவழி, 'ஐ.எம்.எவ்' என்று அறியப்பட்ட சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்துவதே என்று, எல்லோரும் கூறுகிறார்கள். அரசியல்வாதிகள் முதற்கொண்டு பொருளியல் அறிஞர்கள் வரை, அனைவரினதும் இறுதிப் போக்கிடமாக, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதே வழியாக இருக்கிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் வேர்கள் ஆழமானவை. அது இலங்கையின் பொருளாதாரக் கொள்கை சார்ந்தது. அது குறித்து யாரும் பேசுவதில்லை. அதேபோல, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் எவ்வகையான தாக்கங்களை மூன்றாமுலக நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் யாரும் பேசுவதில்லை. இவை இரண்டும் பேசப்பட வேண்டியவை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஐ.எம்.எவ் கடன், ஒரு தற்காலிகத் தீர்வேயன்றி நீண்டகாலத் தீர்வல்ல. அதேவேளை, அந்தக் குறுகியகாலத் தீர்வும், எஞ்சியுள்ள சமூகப் பாதுகாப்புகளையும் முற்றாகப் பறிக்க வல்லது. இது குறித்து யாரும் வாய் திறப்பதில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, ஒரு சமூக நெருக்கடியும் கூட! அதன் சமூகப் பெறுமானங்கள் பேசப்படுவதில்லை. மாறாக, அமெரிக்க டொலரின் விலையே, இலங்கையின் பொருளாதாரத்தின் குறிகாட்டி என்றவாறாகப் பார்வைகள் சுருங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதாரம் தன்னிறைவான தேசிய பொருளாதாரமல்ல என்பது, அதன் பெரிய கோளாறு. ஏற்றுமதியை நோக்கி அதை நகர்த்தும் முயற்சிகள் பலனளிக்கவில்லை. 1978ஆம் ஆண்டு முதல், நாட்டின் உழைப்புச் சக்தியில் கணிசமான பகுதி, நேரடியாக (முக்கியமாக மத்திய கிழக்குக்கு) ஏற்றுமதியாகிறது. அல்லது, சுதந்திர வர்த்தக வலயங்கள் மூலம், அந்நிய ஏற்றுமதி நிறுவனங்களுக்கு விலைபோகிறது. அதனால் நாட்டின் தொழில் உற்பத்திகள் நலிந்துள்ளன.

உழைப்பின் ஏற்றுமதி வருமானம், மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பலதையும் அவசியம் குறைந்த பல நுகர்வுப் பண்டங்களையும் இறக்குமதி செய்ய உதவுகிறது. நீண்ட காலத்தில், இறக்குமதிக்கு ஈடு செய்ய உறுதியான சந்தைப் பெறுமானமுள்ள ஏற்றுமதிகள் தேவை. ஆனால், முற்றிலும் அல்லது பெரும்பாலும் ஏற்றுமதியில் தங்கியுள்ள சிறிய பொருளாதாரங்கள் உறுதி குறைந்தவையும் அந்நிய நெருக்குவாரங்களுக்கு எளிதில் உட்படக் கூடியனவுமாகும்.

பிரித்தானிய கொலனித்துவம், இலங்கையை ஒரு தோட்டப் பயிர்ப் பொருளாதாரமாக விருத்தி செய்தது. தோட்டப் பயிர்ச் செய்கையைச் சார்ந்து தொடங்கிய இலங்கையின் தொழிற்றுறை தொடர்ந்தும் அதைச் சார்ந்தே வளர்ந்தது.

பின்னர், நுகர்வுப் பொருள் உற்பத்தி சிறிது வளர்ந்தாலும் பொருளாதாரச் சுயாதீனம் பற்றிய நோக்கு பலவீனமானது. தோட்டப் பயிர்களின் உலகச் சந்தை விலைகள் போல, சகல மூலவளங்களினதும் முன்னாள் கொலனிகளின் உற்பத்திகளான அடிப்படைப் பண்டங்களினதும் விலைகள் அடிப்படையில், ஏகாதிபத்திய நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இலங்கையின் தோட்டப் பயிர் ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பகுதி, தரகர்களிடம் போனது. எனவே, தேசியமயம் மட்டுமே தோட்டத் துறையை அந்நியக் கிடுக்கிப் பிடியிலிருந்து மீட்கப் போதவில்லை. எனினும், இலங்கையில் 1956க்குப் பின்னர், குறிப்பாக 1960க்குப் பின், இலங்கை தொழிற்றுறையில் ஏற்பட்ட சில முக்கிய வளர்ச்சிகள், முழுமையானதொரு தேசிய பொருளாதாரத் திட்டத்தின் பகுதிகளாகவில்லை. எனவே, 1970களில் உலகச் சந்தையில் எண்ணெய் விலையின் கடும் உயர்வும் அக்காலத்தில் வரட்சி காரணமான உணவுத் தட்டுப்பாடும் மக்களின் (குறிப்பாக நகர மக்களின்) வாழ்க்கையைக் கடினமாக்கின.

அந்த விரக்தியைப் பயன்படுத்தி, பண்டங்களின் தட்டுப்பாட்டைப் போக்குவதாக (வாரத்துக்கு எட்டு கிலோகிராம் தானியம் வழங்குவதாக) உறுதியளித்து, எக்கச்சக்கமான பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்தன அரசாங்கம், திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிவித்து, கட்டுப்பாடற்ற இறக்குமதியையும் அந்நிய முதலீட்டையும் இயலுமாக்கி, நாட்டைப் பெரும் கடனாளியாக்கியது.

1978ஆம் ஆண்டு, நடைமுறைக்கு வந்த திறந்த பொருளாதாரத்தின் முக்கிய தாக்கங்களில் ஒன்று, நுகர்வுப் பொருளாதாரம். மக்களின் நுகர்வு மட்டம், வெகுவாக வளர்ந்ததோடு நுகர்வின் தன்மையும் மிக மாறியது.

உணவு, உடை, பொழுதுபோக்கு, போக்குவரத்து, அன்றாடப் பாவனைப் பொருட்கள் என எதை நோக்கினும், அத்தியாவசியத்தின் இடத்தை ஆடம்பர நுகர்வு பற்றியுள்ளது. ஆடம்பர நுகர்பொருட்களில் பெரும் பகுதி இறக்குமதியாவன. அதைவிட, மின்சாரப் பாவனை, போக்குவரத்து, எரிபொருள் பாவனை என்பன, கடந்த மூன்று தசாப்தங்களில் 10 மடங்குக்கும் மேல் பெருகின. இவற்றுக்கு வேண்டிய அந்நியச் செலவாணி எங்கிருந்து வருகிறது?

நாட்டின் பொருளாதாரத்துக்கும் சமூக நலனுக்கும் பயன்படவேண்டிய உழைப்பின் கணிசமான பகுதி, நேரடி உழைப்பாகப் புலம்பெயருகிறது. இன்னொரு பகுதி, திறந்த பொருளாதார வலயங்களில், மலிவான கூலிக்கு அந்நியக் கம்பனிகளுக்கு விலைபோகிறது. இவ்வாறு, கூலி உழைப்பை ஏற்றுமதிசெய்த சில நாடுகள், தமது சொந்த உற்பத்தித் தளங்களையும் கட்டியெழுப்பின. இங்கு அவ்வாறும் நிகழவில்லை.

திறந்த பொருளாதாரமும் உழைப்பின் ஏற்றுமதியால் கிட்டிய பணப் புழக்கமும் நாட்டில் நுகர்வுப் பழக்கத்தை வலுப்படுத்தின. நுகர்வோடு ஒட்டிய கழிவுப்பொருள் பெருக்கம், சுற்றாடலை மாசுபடுத்தி அதன் பயனான மேலதிக நுகர்வுக்கு வழிகோலியது. எந்தப் பிரச்சினையைத் தீர்க்கவும், உள்நாட்டில் வளங்களைத் தேடிப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, அந்நிய முதலீடுகளையும் கடனையும் நாடும் நிலையில் இலங்கை உள்ளது.

பொருளாதார விருத்தி பற்றிய நமது பார்வை தவறானது. வானுயரும் கட்டடங்களும் விசாலமான விரைவு நெடுஞ்சாலைகளும் பொருளாதாரச் சுமைகளாகும் அளவுக்குப் பொருளாதார விருத்தியை வழங்க மாட்டா. தனியார் மருத்துவத் துறையின் வீக்கமும் தனியார் கல்வியின் கட்டுப்பாடற்ற பரவலும் பொருளாதார வளர்ச்சியாகா; அவை, உண்மையில் சமூகக் கேடானவை.

நுகர்வு, நமது சூழலை மாசுபடுத்தி, மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்திய மாற்றங்களால், இளவயதிலேயே சுவாச, இருதய நோய்கள், நீரிழிவு போன்ன வருகின்றன. இன்று, கொரோனா மிகப்பெரிய வியாபாரமாகி உள்ளது. நோய் குறித்த அச்சம், அதை மிக இலகுவில் சாத்தியமாக்குகிறது.

நாணயச் சந்தையில் இலங்கை ரூபாயின் பெறுமதி, தொடர்ச்சியாக இறங்கி வருகிறது. அதன் பெறுமதியை மீட்க இயலாவிடினும், சரிவையாவது தடுக்க என்ன செய்வதெனத் தெரியவில்லை. எனவே, பலரும் ஐ.எம்.எவ்விடம் கடன் வாங்கலாம் என்கிறார்கள். ஆட்சியாளர்களோ, தத்தமது தலைகளை விட, மற்ற எவர் தலைமீது பழியைச் சுமத்தலாமென்று பார்க்கிறார்கள்.

இலங்கையின் நாணய நெருக்கடிக்கு, உடனடிப் புறக் காரணங்கள் வலுவானவை. ஆனால், அகக் காரணங்கள் அடிப்படையானவை. இருந்தபோதிலும், புறக்காரணிகள் பேசப்படும் அளவுக்கு, அகக் காரணிகள் பேசப்படுவதில்லை.

மத்திய வங்கி குறுக்கிட்டு சரிவைத் தடுக்க, நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பிலிருந்து கணிசமான தொகையை, நாணயச் சந்தைக்குள் அனுப்ப வேண்டும். எதிர்பாராத நாணய நெருக்கடியின் போதோ, குறுகியகாலப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கவோ அது உதவும்.

பல நாடுகளில், பல்வேறு சூழல்களில் அவ்வாறு நடந்துள்ளது. அது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வல்ல. அந்நியச் செலவாணிக் கையிருப்பைப் பேண, ஏற்றுமதிகள் உயர்வதும் இறக்குமதிகள் தாழ்வதும் தேவை. இருக்கும் அந்நியச் செலவாணிக் கையிருப்பில் பெரும் பகுதி, அந்நியக் கடன்களால் கிடைத்தது. கடன்களில் பெரும் பகுதி, மேற்குலக நிதி நிறுவனங்களுக்கு உட்பட்டவை.

கடனின் அளவு குறையாவிடின், அதன் வட்டியும் அந்நியச் செலவாணிக் கையிருப்பைக் குறைக்கும். அதைச் சமாளிக்க அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் நாட்டின் 'திறந்த பொருளாதாரக் கொள்கை'க்குப் பகையானவை. சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் அதற்கு உடன்படா.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை வகுப்பதிலும் வரவுசெலவுத் திட்டத்தை வரைவதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் பங்கு வலியது. இதுவே, நாட்டின் உண்மையான கடன் பொறி. இதன் பின்னணியிலேயே சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது பற்றிப் பார்க்க வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், ஓர் உதவி அமைப்போ, மனிதாபிமான அமைப்போ அல்ல. ஒரு நாட்டை அதன் பொருளாதார நெருக்கடியில் இருந்து காக்கும் 'நல்ல நோக்கத்துக்காக' அவ்வமைப்பு கடன் வழங்குவதில்லை. இந்த உண்மையை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வமைப்பிடம் கடன்பெற்று, மேலும் கடனாளியாகிய நாடுகளின் பட்டியல் மிகவும் நீண்டது. இங்கு நாம் இரண்டு விடயங்களை விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

முதலாவது, கடன் என்றால் என்ன? இரண்டாவது, சர்வதேச நாணய நிதியம் ஏன் கடன் வழங்குகிறது? இவ்விரு வினாக்களுக்கான பதில்கள் ஐ.எம்.எவ் கடனின் ஆபத்துகளை விளக்கப் போதுமானவை. இவை குறித்து, அடுத்த வாரம் பார்க்கலாம்.

TK Newspapers
Viber community

கொச்சி

பெண்ணை ஒப்படைக்க இலஞ்சம் கேட்ட பொலிஸ்

கேரளாவில், வீட்டைவிட்டு வெளியேறி, புதுடெல்லி சென்ற பெண்ணை, அவரது பெற்றோரிடம் ஒப்படைக்க, கொச்சி பொலிஸார் ஐந்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் கேட்ட விவகாரத்துக்கு, கேரள உயர் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கேரளா மாநிலம் கொச்சியில், புதுடெல்லியைச் சேர்ந்த தம்பதி 11 ஆண்டுகளுக்கு முன் குடியேறினர். இத்தம்பதியின் மூத்த மகள், சமூக வலைதளம் வாயிலாக காதல் வலையில் சிக்கினார்.

இதையடுத்து, வீட்டில் இருந்த 35 ஆயிரம் ரூபாய் பணத்துடன், தன் இளைய சகோதரியை அழைத்துக் கொண்டு, புதுடெல்லி சென்றார். மகளைக் காணவில்லையெனத் தேடிய பெற்றோர், கொச்சி வடக்கு பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். பெண்ணின், 'மொபைல் போன் சிக்னலை' வைத்து, அவர் புதுடெல்லியில் உள்ளதை அறிந்த பொலிஸார், இளைஞருடன் தங்கி இருந்த மகள்களை மீட்டு கொச்சி அழைத்து வந்தனர்.

இந்நிலையில், மகள்களை பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றால் 5 இலட்சம் ரூபாய் பணம் தர வேண்டும் என, பொலிஸார் கூறியதாக,

கேரள நாளிதழ்களில் செய்தி வெளியானது. மேலும், பணம் தர தம்பதி மறுத்ததை அடுத்து, அவர்களது மூத்த மகனைக் கைது செய்ததுடன், எட்டாம் வகுப்பு படிக்கும் இளைய மகனை விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதாக அந்த நாளிதழில் செய்தி வெளியானது.

இதன் அடிப்படையில், இந்த விவகாரத்தை கேரள உயர் நீதிமன்றம் தானே முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. நீதிபதி பிறப்பித்த உத்தரவில், 'நாளிதழில் வெளியாகியுள்ள செய்தி உண்மை எனில், இந்த விவகாரத்தை உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டும். நாளிதழில் வெளியாகியுள்ள செய்தியின் அடிப்படையில், இந்த வழக்கைப் பதிவு செய்து, தலைமை நீதிபதியின் வழிகாட்டுதலுடன் விரைவாக முடிக்க வேண்டும். இந்த விவகாரம் தொடர்பான முழு விவரங்களை, கொச்சி ஆணையாளர் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட தம்பதி, பொலிஸாரின் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருப்பதை ஆணையாளர் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தர விட்டார்.

ஆர்யன் கானின் பிணை மனு

20ஆம் திகதி தீர்ப்பு

சொகுசு கப்பல் போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்ட ஆர்யன் கான் பிணை மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்கப்படும் என மும்பை நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மும்பையில் இருந்து கோவாவிற்கு சென்ற சொகுசு கப்பலில் போதைப்பொருள் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ஷாருக்கான் மகன் ஆர்யன் கான் கலந்து கொண்டது தெரியவந்தது. போதைப்பொருள் பயன்படுத்தியதாக அவருடன் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் நான்கு நாள்கள் தேசிய போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அதன்பிறகு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மூன்று முறை ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டதால் சிறையில் இருந்து வெளியில் வர முடியாமல் உள்ளார்.

இந்த நிலையில் ஆர்யன் கான் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு மும்பை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஆர்யன் கான் போதைப்பொருள் பயன்படுத்தியது, விற்பனை செய்த வேலைகளில் ஈடுபட்டுள்ளார் என தேசிய பொதைப்பொருள் தடுப்புப்பிரிவு சார்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஆர்யன்கான் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், கப்பலில் சோதனை நடத்தியபோது ஆர்யன் கான் சம்பவ இடத்தில் இல்லை, போதைப்பொருள் வாங்குவதற்கான பணம் அவரிடம் இல்லை. அவரிடம் போதைப்பொருள் இல்லை எனக்குறிப்பிட்டார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்றம் மனு மீதான விசாரணையை நேற்று (14) நடைபெறும் எனத் தெரிவித்தது.

மும்பை

நான்கு முறை முதலமைச்சர்

இன்னும் முதலமைச்சராக உணர்வதாக கூறிய தேவேந்திர பட்னாவிசுக்கு சரத்பவார் பதிலடி கொடுத்துள்ளார். 4 தடவை முதலமைச்சராக பதவி வகித்த நான் அப்படி உணரவில்லை என்றார்.

மராட்டிய சட்டசபைக்கு 2014ஆம் ஆண்டு தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உயர்ந்த பாரதிய ஜனதா, சிவசேனாவுடன் இணைந்து ஆட்சியை கைப்பற்றியது. தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகி 5 ஆண்டுகால ஆட்சியை நிறைவு செய்தார். இதைத்தொடர்ந்து கடந்த சட்டமன்ற தேர்தலில் பா.ஜனதா- சிவசேனா கூட்டணி அதிக தொகுதிகளை கைப்பற்றியது. இருப்பினும் முதலமைச்சர் பதவி போட்டியால் தேர்தலுக்கு பிறகு பா.ஜனதாவுடான கூட்டணியை சிவசேனா முறித்து கொண்டது.

சிவசேனா தலைமையில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் ஒன்றிணைத்து ஆட்சியை கைப்பற்றியன. இதனால் தேவேந்திர பட்னாவிஸ் மீண்டும் முதலமைச்சராகும் வாய்ப்பை இழந்தார்.

இந்த நிலையில் அவரது பேச்சுக்கு தேசியவாத காங்கிரஸ் நிறுவன தலைவர் சரத்பவார் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து நிருபர்களிடம் கூறுகையில், "சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இன்னும் தன்னை முதலமைச்சராக கருதுவது நல்லது தான். அவரை வாழ்த்துகிறேன். 5 ஆண்டுகள் ஆட்சி முடிந்த பிறகும் பட்னாவிஸ் அந்த பதவியை வகிப்பதாக உணர்கிறார். எனக்கு அந்த குணம் இல்லை. நான் 4 முறை மராட்டிய முதலமைச்சராக பணியாற்றியுள்ளேன். ஆனால் எனக்கு இது நினைவில் இல்லை" என்றார்.

தமிழகம்

பிரதமர், ஸ்டாலின் பிரார்த்தனை

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக பிரதமர் மோடியும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தங்களது டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸின் மூத்த தலைவரும், முன்னாள் பிரதமருமான, மன்மோகன் சிங், (வயது 88) உடல்நலக்குறைவால், புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மூன்று நாள்களாக காய்ச்சல், மூச்சுத் திணறலால் அவதிப்பட்டு வந்த அவருக்கு திடீரென உடல் சோர்வு ஏற்பட்டதை அடுத்து, புதுடெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டொக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். மன்மோகன்சிங் கடந்த 2009ஆம் ஆண்டு இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

மெய்யன்

உள்ளாட்சித் தேர்தல் வெற்றி, தமிழக மக்களின் நற்சான்று

ஊரக உள்ளாட்சித் தேர்தல் வெற்றி, தமிழக மக்கள் அளித்துள்ள நற்சான்று என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ தெரிவித்துள்ளார்.

அக்டோபர் 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடந்து முடிந்த 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றியைப் பெற்று இருக்கிறது. இதில் ம.தி.மு.க போட்டியிட்ட இடங்களிலும் கணிசமான வெற்றிகளை அக்கட்சி பெற்றுள்ளது.

இதுகுறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழக மக்கள், கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பு அற்ற முற்போக்குக் கூட்டணிக்குப் பேராதரவு அளித்து, மு.க.ஸ்டாலின் தலைமையில் நல்லாட்சி அமைவதற்கு அகரம் எழுதினார்கள்.

கொரோனா கொடுந்துயரம் தமிழக மக்களை நிலைகுலையச் செய்திட்ட நேரத்தில், பொறுப்பு ஏற்ற தி.மு.க அரசாங்கம், கடந்த ஐந்து மாத காலமாக மேற்கொண்ட மக்கள் நலன் சார்ந்த பணிகள், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவையும் வாழ்த்துகளையும் பெற்றுத் தந்தன. சாதனைச் சரித்திரம் படைத்த மு.க.ஸ்டாலின் அரசாங்கத்துக்கு, மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் விதத்தில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலிலும் வாக்குகளை வாரிக் குவித்த தமிழக மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். இவ்வாறு வைகோ அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

LK Newspapers Viber Community

சேதன விவசாய மாற்றத்துக்கு

பவர் நிறுவனத்திடமிருந்து குறுங்காலத் தீர்வுகள்

இலங்கையின் விவசாயத் துறையில் புத்தாக்கமான தீர்வுகளை வழங்கும் பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான பவர் நிறுவனம் (A. Baur & Co. (Pvt.) Ltd.), நாட்டின் விவசாயத் துறைக்கு பாரம்பரிய உரப் பயன்பாட்டிலிருந்து சேதன உரப் பயன்பாட்டுக்கு வெற்றிகரமாக மாறுவதற்கு அவசியமான ஆரம்பக்கட்ட பிரதான உள்ளம்சங்கள் மற்றும் தீர்வுகளை, விஞ்ஞானபூர்வ ஆதாரம் மற்றும் அறிவினூடாக தனது நிபுணத்துவ பிரயோக அனுபவங்களைக் கொண்டு பகிர்ந்திருந்தது.

பவர் நிறுவனம் அதன் ஒப்பந்த நிறுவனங்களான Research Institute of Organic Agriculture (FiBL) மற்றும் School of Agricultural, Forest and Food Sciences (HAFL) ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையில் ஏற்பாடு செய்திருந்த நிபுணர் குழுவின் விஜயத்தின் போது கண்டறியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பாரம்பரிய உரப் பயன்பாட்டு உற்பத்தியிலிருந்து சேதன உரப் பயன்பாட்டு உற்பத்திக் கட்டமைப்புக்கு குறுகிய காலப்பகுதியில் மாறிக் கொள்வதற்கு அவசியமான படிமுறைகளை விளக்கியிருந்தது.

இந்த அறிக்கையில் அசேதன உரத்தைப் பயன்படுத்தாமல் தாதுப்பொருட்கள் அடங்கிய சேதன உரத்தைப் பயன்படுத்தி விவசாயக் கட்டமைப்பை மாற்றுவது என்பது போதியளவு சேதன உரமின்மையால் பயனளிக்காது என்பதுடன், நிலத்தின் உயிரியல் அம்சங்களை மீளச் செயற்படுத்துவதன் முக்கியத்துவம் அடங்கலாக தற்போதைய மண்வளம், தாவரக் கட்டமைப்பு என்பது தாதுப்பொருட்கள் அடங்கிய உரத்துக்கு பழக்கப்பட்டுள்ளதுடன், அவற்றால் சேதன உரத்தை உடனடியாக அகத்துறிஞ்சலுக்கு பழக்கப்படுத்திக் கொள்ள முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாய நிலங்களில்

பயன்படுத்துவதற்காக பெருமளவு மூலப் பொருட்கள் கொண்டு செல்லப்பட வேண்டிய தேவை காணப்படுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேதன உரப் பயன்பாட்டுக்கு புவிச்சூழல் கட்டமைப்பை மாற்றுவதற்கு பரிபூரண முறைமை மாற்றம் அவசியமாவதாக குறிப்பிட்டுள்ளதுடன், அதற்கு சில வருட காலம் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, திறன் கட்டியெழுப்பும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாட்டில் இரசாயன உர பயன்பாட்டுக்கு உடனடியாக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பெரும்போகச் செய்கைக்காக அசேதன உரங்களின்றி விவசாயிகளுக்கு மண் வள முகாமைத்துவத்துக்கு அவசியமான தெரிவுகளை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

முதற்படியாக, பெருமளவு சேதன உரத்தை இறக்குமதி செய்து, இயற்கையாக கிடைக்கும் நைட்ரஜனைப் பயன்படுத்தி அவற்றை தயாரிப்பதை பரிந்துரைத்துள்ளது. அத்துடன், உணவுத்துறை, சந்தைகள், விலங்கு வேளாண்மைத் துறையிலிருந்து கிடைக்கும் கழிவுகளைப் பெறக்கூடிய மூலங்களை இனங்கண்டு, அவற்றை சேதனப் பசளையாக மாற்றும் வழிமுறைகளை இனங்காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. அவ்வாறான மீள்சுழற்சியினூடாக, போஷாக்கு வட்டங்களை மூடி, நேர்த்தியான சூழல் தாக்கத்துக்கு வழிகோலும்.

'கொம்போஸ்ட்' உரம் என்பது முக்கிய பங்காற்ற வேண்டியிருப்பதுடன், அதன் செயற்பாடானது, மண் உயிரியல் தன்மையை செயற்படுத்துவதுடன், மண்ணின் கட்டமைப்பை நிலைபெறச் செய்வதனூடாக பல்வேறு அனுகூலங்களை வழங்குகின்றது. இவ்வாறான தரமான கொம்போஸ்ட்களினூடாக தாவரங்களில் ஏற்படக்கூடிய நோய்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

மேலும், விவசாய உற்பத்தி தொடர்பான புதிய பரிபூரண நிர்வாக முறைமையையும் பரிந்துரைத்திருந்தது. இதற்கு அதிகளவு காலம் தேவைப்படுவதுடன், அதற்கு அவசியமான ஆளுமைகள், அறிவும் காணப்பட வேண்டும். பயிர்ச் சுழற்சி அல்லது கலப்பு பயிர்ச் செய்கை நுட்பங்களினூடாக, மண் வள நிர்வாகம், சேதன உற்பத்திக்கு பொருத்தமான பயிர் வகைகளை தெரிவு செய்தல் ஆகியன பின்பற்றுவதற்கு முக்கியமான விடயங்களாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் நீண்ட கால பயன்பாட்டின் போது, வினைத்திறன் வாய்ந்ததாகவும் நிலைபேறான கட்டமைப்பாகவும் அமைந்திருக்கும்.

ராகம மெல்ஸ்டா வைத்தியசாலையில்

புதிய Gastrointestinal நிலையம் திறப்பு

மருத்துவ சேவைகளை வழங்கும் வகையில், ராகம மெல்ஸ்டா வைத்தியசாலை, அண்மையில் தனது சகல வசதிகளும் படைத்த Gastrointestinal நிலையத்தை திறந்துள்ளது. குடலுடன் தொடர்புடைய சகல நோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் வசதியைக் கொண்ட பிரத்தியேகமான நிலையத்தைக் கொண்ட இலங்கையில் முதலாவது தனியார் வைத்தியசாலையாக இது அமைந்துள்ளது.

முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமான மெல்ஸ்டாகோர்ப் பிஎல்சியின் துணை நிறுவனமான மெல்ஸ்டா ஹெல்த் நிறுவனத்தின் அங்கமான ராகம மெல்ஸ்டா வைத்தியசாலையினூடாக, நாட்டின் முன்னணி வைத்திய நிபுணர்களால் குடல்சார் மருத்துவ ஆய்வுகளை முன்னெடுப்பதுடன், அவர்களுக்கு உதவும் வகையில் சிறந்த பயிற்சிகளைப் பெற்ற தாதியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் காணப்படுகின்றனர்.

Gastrointestinal நிலையம் என்பது நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்டுள்ளதுடன், நோயாளர்களின் நடமாட்டத்தைக் குறைத்து, சகல நோயாளர்களுக்கும் திருப்திகரமான அனுபவத்தை, அவர்களால் தாங்கிக் கொள்ளக்கூடிய சகாயமான கட்டணத்தில் வழங்குகின்றது. அடிக்கடி ஏற்படும் வயிற்றோட்டம், வாய்வு, வீக்கம், வயிற்று வலி, மலம் கழிக்கும் போது குருதி வெளியேறல் போன்ற குறைபாடுகளால் பலர் பாதிக்கப்படுகின்ற போதிலும், இந்தக் குறைபாடுகள் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணரத் தவறுகின்றனர்.

இவ்வாறான வசதியைக் கொண்ட சிகிச்சை நிலையமொன்றை மெல்ஸ்டா வைத்தியசாலை நிறுவியுள்ளதனூடாக, இலங்கையில் குடல்சார் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு காணப்படும் இடைவெளி,

தேவைப்பாடு போன்றன இனங்காணப்பட்டுள்ளதுடன், இவ்வாறான சிகிச்சைகளைப் பெறுவதற்கு அனைவருக்கும் கொழும்புக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையும் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தற்போது, கொழும்பு, கம்பஹா பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இலகுவாக இந்தச் சிகிச்சை நிலையத்தை அணுக முடியும்.

மெல்ஸ்டா வைத்தியசாலையின் நிறைவேற்று பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான வைத்தியர். கே. தியாகராஜா இறைவன் கருத்துத் தெரிவிக்கையில், "கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களுடன் இணைந்து செயலாற்றுவதனூடாக அனைவருக்கும் பரிபூரண மருத்துவ பராமரிப்பை சகாயமான கட்டணங்களில் வழங்குவது மெல்ஸ்டா வைத்தியசாலையின் எதிர்பார்ப்பாகும். சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை ஆரம்பம், சிறுநீரகத் தொகுதியுடன் தொடர்புடைய ஒட்டுமொத்த சிகிச்சைகள் மற்றும் தற்போது Gastroenterology போன்றன வைத்தியசாலையால் குறுகிய காலப்பகுதியினுள் நிறுவப்பட்டுள்ள சிகிச்சைப் பிரிவுகளாக அமைந்துள்ளன. மெல்ஸ்டா வைத்தியசாலை உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்வதுடன், சகல பிரிவுகளும் சகாயத் தன்மை, தரம் போன்றவற்றில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளன. இருதய சார் சிகிச்சைகள், இருதய சத்திரசிகிச்சை, நரம்புமண்டல சத்திரசிகிச்சை போன்றவற்றை சர்வதேச அங்கிகாரத்துடன் விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன" என்றார்.

ராகம மெல்ஸ்டா வைத்தியசாலையால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அறிமுகங்களில் சிலதாக இவை அமைந்துள்ளன. தனது சிறுநீரக பிரிவை விஸ்தரிப்பதற்காக வைத்தியசாலை பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளதுடன், அதனூடாக பரிபூரண, சகாயமான சிறுநீரகசார், லேசர் சத்திரசிகிச்சைகள், சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகள் போன்றன முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் புதிய வர்த்தக நாமத்தின் கீழ் நிறுவப்பட்டது முதல், மெல்ஸ்டா ஹெல்த் (பிரைவட்) லிமிடெட் தொடர்ச்சியாக இலங்கையின் மருத்துவ பராமரிப்புத் துறையில் சிறந்த தரங்களை நிர்ணயிப்பது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. சிறுநீரகத் தொகுதி மற்றும் மாற்று சிகிச்சை நிலையத்தை நிறுவியுள்ளதுடன், தற்போது gastrointestinal நிலையத்தையும் நிறுவியுள்ளது.

நோர்வே

வில், அம்புகளால் கொடூர தாக்குதல்; ஐவர் உயிரிழப்பு

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவின் கொங்ஸ்பெர்க் நகரில், மர்ம நபர் ஒருவர் வில், அம்பு மற்றும் துப்பாக்கியால் பொது மக்கள் மீது நடத்திய தாக்குதல்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர் எனவும் இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், இத்தாக்குதலுக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அப்பகுதியில் உள்ள மக்களை வீட்டில் இருந்து வெளியே வரவேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாய்வான்

தாய்வானில் கொரூரத் தீ விபத்து;

46 பேர் உயிரிழப்பு

தாய்வானில் காஹ்சியுங் நகரிலுள்ள 13 மாடி கட்டடமொன்றில் நேற்று (14) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 46 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், காயமடைந்தவர்கள் தீயணைப்பு படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்,

உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் அப்பகுதி மக்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவுஸ்திரேலியா

தடுப்பூசி இல்லையேல் அபராதம்

அவுஸ்திரேலியாவின் வடக்குப் பிரதேசத்தில் ஊழியர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், முடி திருத்துவோர் உள்ளிட்ட பொது மக்களுக்குச் சேவை வழங்குவோர், தடுப்பூசி செலுத்திக் கொள்வது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில், கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் முழுமையாகத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதோருக்கு 3,700 டொலர்கள் அபராதம் செலுத்தவேண்டும் எனவும், அத்துடன் அவர்கள் உடனடியாகப் பணிநீக்கமும்

செய்யப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வடக்குப் பிரதேசத்தின் மக்கள் தொகையில் 80 சதவீதத்துக்கு மேற்பட்டோர் ஒரு முறையாவது தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து

ஊசியே இல்லாத லேசர் 'சிரிஞ்ச்'

நெதர்லாந்தில் லேசர் தொழில்நுட்பத்தில், செலுத்தும் போது வலியே தெரியாத வகையில், ஊசியே இல்லாத சிரிஞ்சை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிரிஞ்சில் ஏற்றப்படும் மருந்து மில்லி செகண்டில் சூடாகி, நீர்குமிழியாக மாறி, நோயாளி மீது தெளிக்கும் போது, தோலில் உள்ள நுண் துவாரங்களின் வழியாக உடலில் சென்று செயலாற்றும் எனவும் அடுத்த மூன்று ஆண்டுகளில் இக்கண்டுபிடிப்பு பொது மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த 'சிரிஞ்ச்' செலுத்துபவர்களுக்கு



நுளம்பு கடிப்பதை விடவும் மிகக் குறைந்தளவிலான உணரவே ஏற்படும் என்றும், ஊசி செலுத்திக் கொள்ளத் தயங்குபவர்கள், இதனால் நன்மை அடைவார்கள் என்றும், மருத்துவக் கழிவுகளைக் குறைக்கும் வகையிலும் இந்த சிரிஞ்ச் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

14 கங்காருகளை கொன்ற இரு சிறுவர்கள்

அவுஸ்திரேலியாவில் சிறுவர்கள் இருவர் 14 கங்காருகளைக் கொன்ற குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் உள்ள லாங் பீச்சில் சனிக்கிழமை (09) காலை 7 மணி அளவில் ஐந்து பெரிய கங்காருக்களும் ஒரு கங்காரு குட்டியும் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாகவும் ஆறு மாதங்களே ஆன கங்காரு குட்டியொன்று காயமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதேபோல் ஏழு பெரிய கங்காருக்களும் ஒரு கங்காரு குட்டியும் Maloneys Beach பகுதியில் கொலை செய்யப்பட்டு கிடப்பதையும் பொலிஸார் கண்டறிந்தனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் 17 வயது சிறுவர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சிறுவர்கள் இருவரும் அக் கங்காருக்களை அடித்தே கொன்றுள்ளதாகவும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பிரேஸில்

உயிர் காத்த அலைபேசி

பிரேஸிலில் பெட்ரோலினா நகரில், கொள்ளையர்கள் அண்மையில் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலிருந்து, நபரொருவரின் உயிரைத் அலைபேசியொன்று காப்பாற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது, பெட்ரோ என்பவரை நோக்கி கொள்ளையன் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அவரது சட்டைப் பையில் வைத்திருந்த 5 ஆண்டுகள் பழைமையான மோட்டரோலா அலைபேசியானது, அவர் மீது பாய இருந்த தோட்டாவைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

இதனையடுத்து இடுப்பில் லேசான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெட்ரோ, சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பினார்.

இந்நிலையில் 'டிஸ்ப்ளே' சேதமடைந்த அந்த அலைபேசியின் புகைப்படத்தை அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

குறித்த புகைப்படமானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல்:

இறுதிப் போட்டியில் கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கின் இறுதிப் போட்டிக்கு கொல்கத்தா நைட் றைடர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது தகுதிகாண் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை வென்றே இறுதிப் போட்டிக்கு கொல்கத்தா தகுதி பெற்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட டெல்லி, வருண் சக்கரவர்த்தி, லொக்கி பெர்கியூசன், ஷிவம் மவி, சுனில் நரைன், ஷகிப் அல் ஹஸனின் கட்டுக்கோப்பான பந்துவீச்சில், 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஷிகர் தவான் 36 (39), ஷ்ரேயாஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 30 (27), பிறித்திவி ஷா 18 (12), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 18 (23), ஷிம்ரோன் ஹெட்மயர் 17 (10) ஓட்டங்களைப் பெற்றனர். சக்கரவர்த்தி 2, பெர்கியூசன் மற்றும் மவி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்திருந்தனர்.

பதிலுக்கு, 136 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, வெங்கடேஷ் ஐயரின் 55 (41), ஷுப்மன் கில்லின் 46 (46) ஓட்டங்களோடு இலகுவாக வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது. எனினும் ஏழு ஓட்டங்களைப் பெறுவதற்குள் 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி, பின்னர் இனிங்ஸின் இறுதிக்கு முந்தைய பந்தில் ராகுல் ட்ரிபாதி பெற்ற ஆறு ஓட்டங்களால் 3 விக்கெட்டுகளால் வென்றது. பந்துவீச்சில், ககிஸோ றபாடா, இரவிச்சந்திரன் அஷ்வின், அன்றிச் நொர்ட்ஜே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஆவேஷ் கான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக வெங்கடேஷ் ஐயர் தெரிவானார்.

இந்நிலையில், டுபாயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை கொல்கத்தா எதிர்கொள்ளவுள்ளது.

தெற்காசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப்:

இறுதிப் போட்டியில் இந்தியா

தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளன சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

மாலைதீவுகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றதையடுத்தே இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

இந்தியா சார்பாக, சுனில் சேத்ரி இரண்டு கோல்களையும், மன்விர் சிங் ஒரு கோலையும் பெற்றனர். மாலைதீவுகள் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலி அஷ்ஃபக் பெற்றிருந்தார்.

இந்நிலையில், முன்னதாக பங்களாதேஷுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய நேபாளமும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பங்களாதேஷ் சார்பாகப் பெறப்பட்ட கோலை சுமோன் றெஸாவும், நேபாளம் சார்பாகப் பெறப்பட்ட கோலை அஞ்சன் பிஸ்டாவும் பெற்றனர்.

பார்சிலோனா செல்லும் லிங்கார்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான ஜெஸி லிங்கார்ட்டை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவும், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனும் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்துடன் யுனைட்டெட்டுடனான லிங்கார்ட்டின் ஒப்பந்தம் முடிவடைவதுடன், அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இங்கிலாந்துக்கு வெளியேயுள்ள கழகங்களுடன் லிங்கார்ட் பேரம் பேச முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

போதுமானளவு வாய்ப்புகளைப் பெற மாட்டேன் என்ற சந்தேகத்தில், யுனைட்டெட்டின் ஒப்பந்தம் ஒன்றை லிங்கார்ட் நிராகரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய உலகக் கிண்ண குழாமில்

அக்ஸர் பட்டேலை பிரதியிட்ட தாக்கூர்

இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமில், அக்ஸர் பட்டேலை ஷர்துல் தாக்கூர் பிரதியிட்டுள்ளார்.

இந்நிலையில், பட்டேல் மேலதிக வீரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார்.

இதேவேளை, ஆவேஷ் கான், உம்ரான் மலிக், ஹர்ஷால் பட்டேல், லுக்மன் மெரிவலா, வெங்கடேஷ் ஐயர், கரண் ஷர்மா, ஷபாஸ் அஹ்மட், கிருஷ்ணப்பா கௌதம் ஆகியோர் உலகக் கிண்ணத்தில் இந்திய அணிக்கு தயார்படுத்தல்களுக்கு உதவுவதற்காக இணைந்துள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பயிற்சிப் போட்டியில்

பப்புவா நியூ கினியை வீழ்த்திய இலங்கை

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று நடைபெற்ற பப்புவா நியூ கினியுடனான சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ண பயிற்சிப் போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, பத்தும் நிஸங்கவின் 76 (58), அவிஷ்க பெர்ணான்டோவின் 61 (37) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது.

பதிலுக்கு, 163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூ கினி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை 124 ஓட்டங்களையே பெற்று 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், வனிடு ஹஸரங்க

4-0-16-2, துஷ்மந்த சமீர 4-1-20-2, தசுன் ஷானக 1-0-5-1, சாமிக கருணாரத்ன 4-0-30-1, மஹேஷ் தீக்ஷன 4-0-34-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

Lk Newspapers Vibe Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 15 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுனுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.